Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions** **Case No. 356 of 2022**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.9**
Defence
Court

| | |
|---|---|
| Name | **சந்திரமௌலி** |
| Father's name | **மோகன்ராம்** |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | **நோடல் ஆபிசர்** |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 24th day of September 2024.**

(G. VIJAYAKUMAR) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 24th day of September 2024.**

1,2 எதிரிகள் ஆஜர்.

( இந்த சாட்சி விசாரணை காணொலி மூலம் பதிவு செய்யப்படுகிறது. காணொலியின் ஒரு முனையில் நீதிபதியும், நீதிமன்ற ஊழியர்களும், 1வது எதிரி தரப்பு வழக்கறிஞர் திரு. L.சதீஷ்குமார் அவர்களும், 2வது எதிரி தரப்பு வழக்கறிஞர் திரு. C. அரிகிருஷ்ணன், அவர்களும் இருக்கிறார்கள். காணொலியின் மற்றொரு முனையில் இவ்வழக்கில்

சாட்சியம் அளிக்க வந்துள்ள சாட்சியான திரு. சந்திரமௌலி அவர்களும் உள்ளார்கள். இருதரப்பினர் சம்மதத்தின் பேரில் இந்த சாட்சியின் விசாரணை காணொலி மூலம் பதிவு செய்யப்படுகிறது.

மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி காணொலி மூலம் முன்னிலையாகி சத்தியபிரமாணத்தின்பேரில் அரசுத்தரப்பில் முதல்விசாரணை மற்றும் எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்பட்டார்).

**சாட்சி விசாரணை ஆரம்பித்த நேரம் மாலை 03.15 மணி**

**முதல்விசாரணை**

நான் தற்சமயம் சென்னையில் உள்ள ரிலையன்ஸ் ஜியோ நிறுவனத்தில் Deputy General Manager cum State Nodal Officer ஆக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2022 ஆம் ஆண்டில் இதே பணியிலிருந்தபோது, கடலூர் காவல்துறையின் அதிகாரப்பூர்வ மெயில் I.D. யான dspdcrbcud.tnpol@nic.in என்ற மின்னஞ்சலில் இருந்து, 93613 58173 என்ற ஜியோ எண்ணிற்கான customer application form மற்றும் 01.06.2021 முதல் 07.01.2022 வரையிலான காலக்கட்டத்திற்கான அழைப்பு விவரங்கள், டவர் லொகேஷன் விவரங்கள் மற்றும் பிரிவு 65-B -இந்திய சாட்சிய சட்டத்தின் கீழான சான்று ஆகியவற்றை கேட்டிருந்தார்கள். அதனடிப்படையில் கடந்த 14.02.2022 ஆம் தேதியிட்ட முகப்பு கடிதத்துடன் மேற்கண்ட விவரங்களையும், customer application form ஆகியவற்றை பிரிவு 65-B -இந்திய சாட்சிய சட்டத்தின் கீழான சான்றுடன் காடாம்புலியூர் காவல்நிலைய ஆய்வாளருக்கு கூரியர் தபால் மூலம் அனுப்பி வைத்தேன். என்னிடம் காட்டப்படும் customer application form மற்றும் டவர் லொகேஷன் விவரங்களுடன் கூடிய 01.06.2021 முதல் 07.01.2022 வரையிலான காலக்கட்டத்திற்கான அழைப்பு விவரங்கள், மற்றும் பிரிவு 65-B -இந்திய சாட்சிய சட்டத்தின் கீழான சான்று ஆகியவை நான் கூரியர் தபால் மூலம்

காடாம்புலியூர் வட்ட காவல்ஆய்வாளருக்கு அனுப்பியதுதான். **Customer application form அசாஆ 11 ஆகும். டவர் லொகேஷன் விவரங்களுடன் கூடிய 01.06.2021 முதல் 07.01.2022 வரையிலான காலக்கட்டத்திற்கான அழைப்பு விவரங்கள் (CDR) அசாஆ 12 ஆகும். நான் வழங்கிய பிரிவு 65-B -இந்திய சாட்சிய சட்டத்தின் கீழான சான்று அசாஆ 13 ஆகும்**. 01.07.2021 க்கு பிறகு மேற்படி மொபைல் எண் பயன்படுத்தப்படாததால் 01.06.2021 முதல் 01.07.2021 வரையிலான காலக்கட்டத்திற்கான அழைப்பு விவரங்களை அனுப்பியுள்ளேன். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>1 வது எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

01.06.2021 முதல் 01.07.2021 வரையிலான காலக்கட்டத்திற்கான அழைப்பு விவரங்களை மட்டும்தான் அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். அதில் மொத்தம் 59 பக்கங்கள் உள்ளது என்றால் சரிதான். பொதுவாக ஒரு டவர், 500 மீட்டர் முதல் 2500 மீட்டர் வரை cover செய்யும். காடாம்புலியூர் காவல்நிலைய ஆய்வாளர் எப்போது என்னை விசாரித்தார் என்று எனக்கு நினைவில்லை. நான் கூரியரில் மேற்படி விவரங்களை அனுப்பிய பிறகு தான், போலிசார் என்னை விசாரித்தார்கள். 14.02.2022 ஆம் தேதிக்கு பிறகு தான் போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் அதன்பிறகு தான் விசாரித்திருப்பார்கள், தேதி எனக்கு ஞாபகமில்லை. எங்கு வைத்து, யார் என்னை விசாரித்தார்கள் என்றும் எனக்கு ஞாபகமில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றாலும், அதனால் தான் என்னை எப்போது, யார், எங்கு வைத்து விசாரித்தார்கள் என்று ஞாபகமில்லை என்று சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க போலிசார் விசாரித்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>2 வது எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

இல்லை என தெரிவிக்கப்பட்டது.

மறுவிசாரணை இல்லை.

சாட்சியின் கையெழுத்து

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*
*Sd/-G.Vijayakumar*
*I Additional District Judge*
*Cuddalore.*

**சாட்சி விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 03.55 மணி**

சாட்சி, சென்னை சிட்டிசிவில் நீதிமன்ற வளாகத்தில் உள்ள வீடியோ கான்பரன்ஸிங் அறையில் ஆஜரானார். காணொலி மூலம் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சர் மூலம் தட்டச்சு செய்து அதனை சரிபார்த்து பிழைகளை சரிசெய்து மீண்டும் சாட்சியிடம் வாசித்து காண்பிக்க, சாட்சி சரியாக உள்ளதாக ஒப்புக்கொண்டார். அதனை உறுதிப்படுத்திய பின்னர் சாட்சியத்தின் நகல் இ-மெயில் மூலம் சென்னை சிட்டிசிவில் நீதிமன்ற இ மெயில் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும், அதில் சாட்சி கையெழுத்திட்டு அதனை ஸ்கேன் செய்து நீதிமன்றத்திற்கு இ- மெயில் மூலம் இன்றைய தினமே திரும்ப அனுப்பி வைக்கவேண்டும் என்றும், சாட்சியத்தின் மற்றொரு நகலை எடுத்து அதில் 4 (Viii) Madras High Court Video Conference Rule, 2018 ன்படி Co-ordinator ஆக நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட Assistant Programmer, City Civil Court, Chennai – Tmt.V.Rukhmani Divyadharsini அவர்கள் முன்னிலையில் சாட்சி கையெழுத்திட்டு மேற்படி அதிகாரி சான்றொப்பம் செய்து, நீதிமன்றத்திற்கு தபால் மூலம் அதனையும் அனுப்பி வைக்கவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்படி

சாட்சியம் பதிவு செய்யப்பட்டபோது உள்ள ஆடியோ வீடியோ பதிவினை அதன் hash key value குறிப்பிட்டு பாதுகாப்பாக வைக்கவும் உத்திரவிடப்படுகிறது.

(ஒ-ம்.) ஜி. விஜயகுமார்
முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
கடலூர்.

The witness deposed at remote point I was present, the deposition was read over to the witness, admitted to be correct and signed before me.

Coordinator at Remote Point:
Tmt. V.Rukhmani Divyadharsini
Assistant Programmer,
City Civil Court,
Chennai.

சாட்சி, வீடியோ கான்பரன்ஸிங் மூலம் விசாரிக்கப்பட்டார். சாட்சி சொல்ல சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, PDF ஆவணமாக ஈ மெயிலில் அனுப்பி வைக்கப்பட்டது.

(ஒ-ம்.) ஜி. விஜயகுமார்
முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
கடலூர்.